## கேள்வி:

# "ஒரு சபையைப் போலவே வேறொரு சபையும் நல்லதென்றால், நாமகரணமற்ற நிலை வேண்டும் என்று கவலைப்பட வேண்டியது ஏன்?"

## பதில்:

*நாமகரணமற்ற நிலையிலிருக்க வேண்டும் என்பதே நமது நோக்கமாயுள்ளது. ஆனால் அதைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? எப்படியிருப்பினும், ஒரு சபையைப் போலவே வேறொரு சபையும் நல்லதென்றால் நாமகரணமற்ற நிலை வேண்டும் என்று கவலைப்பட வேண்டியது ஏன்?*

*இந்தக் கேள்விக்கு பதில் தர நாம் முயற்சி செய்கின்றோம், ஆனால் நமது நோக்கத்தைப் பற்றிய விளக்கம் மற்றும் அதற்காகப் போராடுதல் பற்றி நாம் கூறத் தொடங்க வேண்டியது தேவை.*

## *நாமகரணமற்ற கிறிஸ்தவம் பற்றிய ஒரு விளக்கம்*

*நாமகரணமற்ற கிறிஸ்தவம் பற்றிய ஒரு விளக்கத்தை முதலாவது யோசித்துப் பாருங்கள். நாம் பேசுகின்ற வார்த்தைகளின் விளக்கத்தைக் கூறித் தொடங்குவோம்.*

*"நாமகரணம்" என்ற வார்த்தையின் மூலம் நாம் எதை அர்த்தப்படுத்துகிறோம்? மத ரீதியாக அநேக மக்கள் அதற்கு என்ன பொருள் கூறுகிறார்களோ அதையே நாம் பயன்படுத்துகிறோம். நான் இந்த வார்த்தைக்குக் கண்ட பொருள்களில் பின்வருபவையும் அடங்குகின்றன: "ஒரு மதக் குழு*

அல்லது பிரிவு,"[1] "விசேஷமாகப் பெயரிடப்பட்ட ஒரு சபை அல்லது பிரிவு,"[2] " 'நாமகரணம்' என்ற வார்த்தை தனிப்பட்ட ஒரு மத நிறுவனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது"[3]; "ஒரு குறிப்பிட்ட உபதேச சட்டத்திற்கு விசேஷித்த பெயரின் கீழ் கீழ்ப்படியும் மதக் கூட்டத்திற்கு இது பயன்படுத்தப் படுகிறது."[4]

இவ்வாறாக, ஒரு நாமகரணக் கூட்டம் என்பது மத ரீதியான பிரிவாக உள்ளது. அது குறிப்பிட்ட ஒரு பெயரில் அமைந்த, குறிப்பிட்ட உபதேசங்களைக் கொண்ட ஒரு பிரிவாகும். ஒவ்வொரு நாமகரணக் கூட்டமும், தனக்கென்று சில நடைமுறைகளும், உபதேசங்களும், ஆராதனை முறை களும் கொண்டவையாக உள்ளது. பல நாமகரணக் கூட்டங் கள் தங்களுக்கென்று மைய நிறுவனத்தைக் கொண்டு அதன் கட்டுப்பாட்டில் உள்ளவையாய் இருக்கின்றன.

குறிப்பிட்ட சில உபதேசங்களைக் கொண்டுள்ள பிரிவாக, முழுமையின் ஒரு பகுதியாக மட்டும் அவை இருக்கின்றன. நாமகரணக் கூட்ட எழுத்தாளர்கள், ஒவ்வொரு நாமகரணக் கூட்டமும் கிறிஸ்தவத்தின் ஒரு பகுதியென்றும், பலவித நாமகரணக் கூட்டங்களும் கிறிஸ்துவின் மாபெரும் சரீரத்தின் பாகங்கள் என்றும் யூகிக்கின்றனர்.

"நாமகரணமற்ற நிலை" என்ற வார்த்தையின் மூலம் நாம் எதை அர்த்தப்படுத்துகிறோம்? வரலாற்றின் காலத்தினூடே நாமகரணக் கூட்டங்கள் இன்றி இருந்த நிலைவரை பின் சென்று, அங்கு நாம் காணும் சபையைக் கண்டு அதை முன்பிருந்த நிலைமைக்குக் கொண்டு வருதலே நமது நோக்கமாகும். நாமகரணக் கூட்டங்களுக்கு முன்பிருந்த நிலைமையே நமது நோக்கம் என்று நீங்கள் கூறலாம்.

வரலாற்றில் இப்படிப்பட்ட காலம் எப்போதாவது இருந்ததா? ஆம்! புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், ஒரே சரீரம் இருந்தது (எபேசி. 4:4); அந்த சரீரம் சபையாகும் (எபேசி. 1:22, 23; cf. மத். 16:18; 1 கொரி. 12:20). இவ்வாறாக நாமகரணக் கூட்டங்களின்றி, ஒரே ஒரு சபை, கிறிஸ்துவின் சரீரமாக இருந்தது. அந்த ஒரு சபைதான் முழுமையான கிறிஸ்தவமாக இருந்தது.

புதிய ஏற்பாட்டில், நாமகரண நிலைக்கு ஒத்துப்போகக் கூடிய ஒரு சூழ்நிலையை கொரிந்து பட்டணத்தில் காண்கின் றோம்:

*ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்கு வாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. உங்களில் சிலர், நான் பவுலைச் சேர்ந்தவன் என்றும், நான் அப்பொல் லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவ னென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லு கிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப் பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? (1 கொரி. 1:11-13).*

*இவ்விடத்தில், நாம் இன்றைய நாட்களில் அறிந்துள்ளபடி நாமகரணக் கூட்டங்கள் இல்லையென்றாலும், நாமகரணத்தின் விதைகள் மட்டும் காணப்பட்டன. அந்த விதைகள் கூடக் கண்டனம் செய்யப்பட்டன!* (cf. *கலா. 5:19-21*). *புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் ஒரே ஒரு சபை மட்டுமே இருந்தது, அந்த சபையை குழுக்கள் அல்லது பிரிவுகளாகப் பிரிக்க முயன்ற எந்த இயக்கமும் கண்டனம் செய்யப்பட்டன.*

*இவ்வாறாக புதிய ஏற்பாட்டு சபையானது நாமகரணமற்ற நிலையில் இருந்தது. நாமும் அப்படிப்பட்ட சபையாக இருக்க வேண்டும் என்பதே நமது நோக்கமாகும்! அந்த சபையில் இருப்பதற்கு நாம் நாமகரணமற்ற நிலையில் இருப்பது தேவையாகும். புதிய ஏற்பாட்டு சபை நாமகரணமற்ற நிலையில் இருந்ததால், நாமகரணத்தைப்பற்றி நாம் பேசு கையில், அப்போஸ்தலர்களின் காலத்திற்குப் பிறகு உண்டான சூழ்நிலைகளையும் மற்றும் முதலாம் நூற்றாண்டுக்குப் பிறகு உண்டான பிரிவினை சபைகளையும் பற்றி நாம் பேசுகிறோம்.*

## நாமகரணமற்ற கிறிஸ்தவத்திற்கான ஒரு தற்காப்பு வாதம்

*இரண்டாவதாக, நாமகரணமற்ற கிறிஸ்தவத்திற்கான ஒரு தற்காப்பு வாதத்தைக் கவனியுங்கள். நாமகரணமற்ற நிலையை நாம் தற்காக்க வேண்டிய தேவை என்ன?*

*சில மக்கள், நாமகரண நிலையிலிருந்து விலகி, சபையை முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கு நம்மை வழிகாட்டுவதற்குத் தேவன் முன்மாதிரி எதுவும் கொடுக்க வில்லை என்றும், அதனால், புதிய ஏற்பாட்டு சபையைப் போல நாமகரணமற்ற நிலையில் இருப்பதென்பது இயலாத விஷயம்*

*என்றும் மறுப்புத் தெரிவிக்கின்றனர்.*

*சிலர் ஒரு முன்மாதிரி கிடையாதென்கின்றனர். மதத்தில் வேதாகமத்தை மாறாத ஒரு வழிகாட்டியாக நாம் பயன் படுத்துவதை தேவன் விரும்புகிறார் என்பதையோ அல்லது புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த சபை, இன்றைய நாட்களில் உள்ள சபைக்கு முன் மாதிரியாக உள்ளது என்பதையோ இவர்கள் நம்புவதில்லை.*

*இவர்களின் எண்ணம் சரியானதுதானா? இயேசு அப்போஸ்தலர்களிடம் தாம் கட்டளையிட்ட யாவற்றையும் மற்றவர்களுக்கு உபதேசிக்கும்படி கூறிய பின்பு, "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார் (மத். 28:20). இது ஒருவேளை, இயேசு தாம் அப்போஸ்தலர்களிடம் ஒப்புவித்த முன்மாதிரியை மாற்றும்படி எதிர்பார்க்கிறார் என்பது போல தொனிக்கிறதா? யூதா 3ல் "பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தை" ப் பற்றி நாம் படிக்கின்றோம். அது முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே புதிய ஏற்பாட்டு முன்மாதிரி உரியது என்று கூறுகிறதா? பவுல், தான் போதித்ததை அல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து போதித் தாலும் அத்தூதன் சபிக்கப்பட்டவன் என்று கூறினார் (கலா. 1:8). அவருடைய உபதேசம் ஒரு தற்காலிகமான முன் மாதிரியை மட்டுமே நிலைநாட்டியதா?*

*புதிய ஏற்பாடு "உலகத்தின் முடிவுபரியந்தம்" வழி காட்டியாக இருக்க ஏற்படுத்தப்பட்டது என்றால், புதிய ஏற்பாட்டின்படியான சபையே "உலகத்தின் முடிவுபரியந்தம்" ஒரு முன்மாதிரியான சபையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நாம் நம்பியாக வேண்டும். அப்போஸ்தலர்கள் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப்பட்டார்கள் (யோவா. 16:13), அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததன் விளைவாக கர்த்தருடைய சபை நிலைநாட்டப்பட்டது. ஏவப்பட்ட இந்த அப்போஸ்தலர்களால் ஒப்புவிக்கப்பட்ட உபதேசங்களை சபையானது போதித்தும் பின்பற்றியும் வந்தது. அந்த சபையைப் பற்றி நாம் புதிய ஏற்பாட்டில் படிக்கின்றோம்; அங்கு நாம் அதன் உபதேசம், ஆராதனை மற்றும் அமைப்பு ஆகியவற்றைப் பற்றிக் கற்றுக் கொள்கிறோம். கிறிஸ்து இவ்விதமாக சபையை ஸ்தாபித்தது மற்றும் சபையைப் பற்றிய*

உண்மைகளை வெளிப்படுத்தியது உலகத்தின் முடிவு பரியந்தம் ஒரு முன்மாதிரியாக இருப்பதற்கல்லவென்றால் அவர் ஏன் அதைச் செய்ய வேண்டும்?

நாம் இதை நம்புகின்றோம்: கிறிஸ்து நிர்மாணித்த அந்த சபையே அவர் விரும்புகின்ற சபையாகும். அப்போஸ்தலர்கள் வெளிப்படுத்தின முன்மாதிரியைப் பின்பற்றுகின்றவரை சபையானது தேவனைப் பிரியப்படுத்தக் கூடியதாயுள்ளது. அந்த முன்மாதிரியை நாம் பின்பற்றினால், தேவனைப் பிரியப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம் என்று நிச்சயமாய் நாம் கூற முடியும்.

சிலர், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் சபைக்கு ஒரே ஒரு முன்மாதிரி இருந்ததில்லையே என்று மறுப்புத் தெரிவிக் கின்றனர். ஒரு ஊழியக்காரரை நான் சந்தித்து அவரிடத்தில் புதிய ஏற்பாட்டின்படியான சபையை மறுபடியும் கட்டி யெழுப்புவது குறித்து விளக்கமளிக்க நான் முயற்சி செய்தது எனக்கு நினைவுக்கு வருகின்றது. அதற்கு அவர் பதில் அளிக்கை யில் ''ஆக நீங்கள் புதிய ஏற்பாட்டின்படியான சபையை மீண்டும் அமைக்கவிருக்கிறீர்கள். ஆனால் எந்த சபையை மீண்டும் அமைப்பீர்கள்? எருசலேம், அந்தியோகியா, எபேசு அல்லது கொரிந்து சபைகளில் எந்த சபையை நீங்கள் மீண்டும் அமைப்பீர்கள்?" என்று கேட்டார். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில் இருந்த பிராந்திய சபைகள் மாறுபாடுள்ளவை யென்றும், அதனால், இன்றைய நாட்களில் சபையை மீட்ட மைக்க ஒரே ஒரு முன்மாதிரி மட்டும் இருப்பதில்லை என்றும் அவர் நம்பினார். அவர் கூறியது சரியானதா?

முதல் நூற்றாண்டில் இருந்த கர்த்தருடைய சபைகளில் சில மாறுபாடுகள் இருந்தன. இந்த மாறுபாடுகள் அனைத்திற்கும் இரு மூலகாரணங்கள் இருந்தது கண்டறியப்பட்டுள்ளது. சில மாறுபாடுகள் நன்மையைக் கருதியும், சில மாறுபாடுகள் அப்போஸ்தலருடைய உபதேசத்தை எச்சரிக்கையாய்ப் பின்பற்றாமையினாலும் உண்டாயின. கிறிஸ்துவால் நிலைநாட்டப்பட்ட சபை பரிபூரணமானதாயிருந்தது, ஆனால் அச்சபை நிறைவற்ற மனிதர்களைக் கொண்டதாக உள்ளது. நாம் அதன் முழு நிறைவைக் கட்டியெழுப்ப விரும்புகிறோம்; அதில் உள்ள நிறைவற்ற மனிதர்களின் தவறுகளை அல்ல.

மேலும், ஒரே விசுவாசத்தின் முக்கிய அங்கமாய் இருக்க வேண்டிய பகுதிகளில், பல்வேறுபட்ட பகுதிகளில் இருந்த

கர்த்தருடைய சபைகள் ஒன்று போலவே இருந்ததைச் சுட்டிக் காட்டும் சான்றுகள் உள்ளன. ஒவ்வொரு சபை அல்லது பிராந்திய சபையிலும் மூப்பர்கள் நியமிக்கப்பட்டனர் (அப். 14:23); அவர்கள் ஆராதனையில் பாடினார்கள் (எபே. 5:19; கொலோ. 3:17); அவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றார்கள் (அப். 2:42; 20:7; 1 கொரி. 11); அவர்கள் வரவுக்குத் தக்கதாகக் காணிக்கை கொடுக்கும்படியாய் இருந்தது; அவர்கள் முழுகுதல் ஞானஸ்நானத்தை நடைமுறைப்படுத்தினார்கள் (அப். 8:39; ரோமர் 6:3, 4; கொலோ. 2:12); எல்லாரும் ஒரே மாதிரியாகவே இரட்சிக்கப்பட்டார்கள் (அப். 15:9, 11); ஒரு சபையாருக்கு ஏவுதலால் எழுதப்பட்ட நிருபம் எல்லாராலும் வாசிக்கப்பட்டது (கொலோ. 4:16). சொல்லப் போனால், பவுல், “இதினிமித்தமாக எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்; நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப் படுத்துவான்” (1 கொரி. 4:17) என்று எழுதினார். இப்படியிருக்க, புதிய ஏற்பாட்டில் உள்ள கர்த்தருடைய சபைகள் ஒரே விதமாக முன்மாதிரியைக் கொண்டவைகளல்ல என்றும் அவைகள் வித்தியாசப்பட்டவைகள் என்றும் ஒருவர் எப்படிச் சொல்ல முடியும்?

இரண்டாவதாக, சிலர், எல்லா நாமகரணக் கூட்டங்களும் ஒரே சபையின் கிளைகள்தான்; எனவே நாமகரணமற்ற கிறிஸ்தவத்தை மறுபடியும் கட்டியெழுப்புவதற்கு முயற்சி செய்வது தேவையற்றது என்று சொல்லுகின்றனர்.

இவர்கள் சொல்வது சரியானதா? நாமகரணக் கூட்டங்கள் சபையின் கிளைகளா? அவைகள் முழுமையின் பகுதிகளா? அவைகள் நாமகரணத்தின் கிளைகளாகவோ அல்லது புரொட்டஸ்டான்டுகளின் பகுதிகளாகவோ இருக்கலாம், ஆனால் அவை புதிய ஏற்பாட்டில் நாம் படிக்கின்ற சபையின் அங்கங்களா என்பதில் நமக்குச் சந்தேகம் உண்டாகிறது. புதிய ஏற்பாட்டில், “கிளைகள்” பற்றி ஒரே ஒரு இடத்தில் மட்டுமே நாம் படிக்கிறோம்: கிறிஸ்து, “நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள்” என்றார் (யோவா. 15:5). ஆனால் அவ்விடத்தில் அவர் மேலும், “ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு

*உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்'' (யோவா. 15:6) என்றும் கூறினார். கிறிஸ்துவுக்குள் உள்ள ஒவ்வொருவரும் ஒரு கொடியாவார்.*

*ஒரு கொடியில் ஆரஞ்சப் பழங்கள், மற்றொரு கொடியில் ஆப்பிள் பழங்கள், வேறோரு கொடியில் தர்பூஜா பழங்கள் ஆகியவற்றைத் தருகின்ற திராட்சைக் கொடியை நீங்கள் எப்போதாவது கண்டதுண்டா? கண்டிருக்க முடியாது, தனியொரு செடியில் உள்ள ஒவ்வொரு கொடியிலும் ஒரே விதமான கனிகளே கிடைக்கும். ஆனால் நாமகரணக் கூட்டங்கள் ஒரே விதமான கனிகளைத் தருவதில்லையே! எனவே அவைகள் புதிய ஏற்பாட்டின்படியான சபையின் கிளைகளாயிராமல், தானாகவே எழுந்த செடிகளாய் உள்ளன.*

*மூன்றாவதாக, சிலர், நாமகரணக் கூட்டங்களற்ற கிறிஸ் தவத்தை இன்றைய நாட்களில் மறுபடியும் கட்டி எழுப்ப முயற்சிப்பது நடைமுறையில் சாத்தியமற்றதாகும் என்று மறுப்புத் தெரிவிக்கின்றனர்.*

*சிலர், அப்படி நாம் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மறுபடியும் கட்டி எழுப்பினாலும், அதுவும் இன்னுமொரு நாமகரணக் கூட்டமாகவே இருக்கும் என்கின்றனர்.*

*''நாமகரணக் கூட்டம்'' என்பதற்கு நாம் கொடுத்த முதலாவது விளக்கத்தை அவர்கள் எடுத்துக் கொள்கின்றனர். அதாவது ''பெயர்'' என்பது நாமகரணத்தைக் குறிப்பதா யுள்ளது. எனவே, எந்தவொரு சபைக்கும், பெயர் ஒன்று இருந்தால் அது நாமகரணக் கூட்டமாகும் என்கின்றனர். நாம் ஒரு பெயரைக் கொண்டிருப்பதால் நாமகரணக் கூட்டமாகி விடுகின்றோமா?*

*மற்ற எல்லாப் பெயர்களையும் விட்டுவிட்டு, ஒரே ஒரு பெயரை வைக்கும்படி நாம் கோரவில்லை யென்பதைத் தயவு செய்து கவனியுங்கள். "சபை," "சரீரம்," "கிறிஸ்துவின் சபை" என்பவைகளெல்லாம் பெயர்களல்ல, மாறாக உறவின் நிலைகளாகும்; இது கிறிஸ்துவுக்கே உரிய சபையாகும். புதிய ஏற்பாட்டில் மேற்சொன்ன பெயர் விளக்கங்கள் யாவும் காணப்படுகின்றன. வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால், பெயர் ஒன்று இருப்பதால் அது நாமகரணக் கூட்டமாகும் என்றால், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த சபை நாமகரண சபையாகும்.*

பெயர் ஒன்று மட்டுமே ஒரு நாமகரணக் கூட்டத்தை உருவாக்கப் போதுமானதல்ல. மற்ற குழுக்களில் இருந்து வித்தியாசமாய்க் காணப்படுவதால் அவைகள் நாமகரணக் கூட்டங்கள் ஆகின்றன. சபை பிரிவுக் கூட்டங்களிடையே உள்ள வேறுபாடு பெயர்கள் மட்டுமே என்று இருந்தால், உண்மையாக நாமகரணக் கூட்டங்களே இல்லையென்ற நிலைதான் இருந்திருக்கும். எல்லாம் ஒன்றாகவே இருந்திருக்கும். ஒரு பிரிவுக்கூட்டம் தனக்கென்று ஒரு பெயரைக் கொண்டிருப்பதால் மட்டும் நாமகரணக் கூட்டம் ஆகிவிடாது.

தனக்கென்று ஒரு தனிப்பட்ட தொடக்கம், பொதுவான சில நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள், எழுதப்பட்ட அல்லது எழுதப்படாத சட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தால் ஒரு நாமகரணக் கூட்டமாகிறது என்று சிலர் கூறுகின்றனர். இவ்விளக்கத்தைப் பயன்படுத்தினால், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த சபையும் ஒரு நாமகரணக் கூட்டமேயாகும்! ஆனால் அதை ஒருவரும் நம்புவது கிடையாது, மற்ற கூட்டங்களிலிருந்து தனியே பிரிந்து இருப்பதாலும், தனக்கென்று சொந்தமாக உபதேசங்கள் மற்றும் நடைமுறைச் சட்டங்களைக் கொண்டிருப்பதாலும் மட்டுமே ஒரு சபை, நாமகரணக் கூட்டமாகிவிடாது.

புதிய ஏற்பாட்டின்படியான சபையை மறுபடியும் கட்டியெழுப்புவதென்பது சமுதாயத்தில் இன்னும் பல மதப் பிரிவினைகளை உண்டாக்கும் என்று சிலர் தாக்கிப் பேசுகின்றனர். நாம் சமுதாயத்தில் இவ்வூழியத்தை ஆரம்பிக்கையில், நாமகரணச் சூழ்நிலையை விடுவிப்பதற்குப் பதில் அதைத் தூண்டிவிட்டு, ஏற்கனவே உள்ள சபைகளோடு இன்னொரு சபையை உண்டாக்கி விடுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

மேற்சொன்ன கூற்றில் உண்மையிருப்பது போல தோன்றலாம். ஒரு சமுதாயத்தில் நாம் ஊழியம் செய்யத் தொடங்கும்போது அதன் விளைவாக இன்னொரு சபை உண்டாகிறது. வெளியில் உள்ளவர்களின் கண்பார்வையில் இது இன்னுமொரு நாமகரணக் கூட்டமாகக் காட்சியளிக்கும்.

ஆனால் வெளிப்புறத் தோற்றங்கள் வஞ்சிக்கக் கூடியவைகளாகும். மற்ற சபைகளுக்குள்ளாகவே இருந்துகொண்டு நாமகரணமற்ற கிறிஸ்தவ சூழ்நிலையைக் கொண்டுவர ஏன் முயற்சி செய்யக் கூடாது? இந்தக் கேள்விக்கு நீண்ட

காலத்துக்கு முன்பே விடை தந்தாயிற்று. சபையை மறுகட்டுமானம் செய்ய ஆரம்பித்த நாட்களில், அவ்வியக்கத்தின் முன்னோடிகள் நாமகரணக் கூட்டத்தின் தவறுகளை உணரும்படி செய்வதற்காக, அக்கூட்டங்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். ஆனால் கடைசியாக நாமகரணக் கூட்டங்களை விட்டுவிட்டு தனியாக ஆராதிக்க ஆரம்பித்தனர். ஏன்? அவர்கள் வெளியேறும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டனர்! நாமகரண கூட்டங்கள், நாமகரணமில்லாத கிறிஸ்தவத்தைப் பற்றிக் கேட்கக் கூட விரும்பவில்லை. நாமகரணக் கூட்டத்தார் புதிய ஏற்பாட்டின் சபைக்காகக் குரல் கொடுத்தவர்களைத் தங்கள் பிரசங்க மேடைகளில் பிரசங்கம் செய்யக்கூட அனுமதிக்கவில்லை. நாமகரணமற்ற கிறிஸ்தவத்தைப் பிரசங்கம் செய்யக் கூடாது என்பதை அந்நாள் முதல் நாமகரணக் கூட்டத்தார் ஒரு சட்டமாகவே ஆக்கிவிட்டனர்.

நாமகரணமற்ற கிறிஸ்தவத்திற்கான வேண்டுகோளானது பிரிவினை உண்டாக்குவது போல் தோன்றுவதற்கு ஒரே காரணம், மனிதர்கள் தங்களது நாமகரண நிலையை விட்டுவிட விரும்பாமைதான், எனவே நாமகரணமற்ற நிலைக்காக அவர்களுக்குள்ளே இருந்து கொண்டே குரல் கொடுப்பது இயலாத செயலாகும்.

இப்பொழுது ஒரு எளிய தற்காப்பு முறையைக் கவனிப்போம்.

இன்றைய நாட்களில் நாமகரணமற்ற நிலையில் இருப்பது சாத்தியமா? இந்த விவாதத்தைப்பற்றி எண்ணிப் பாருங்கள்: கிறிஸ்தவர்களாவதற்கும், கிறிஸ்தவர்களாய் இருப்பதற்கும் அவர்கள் எதைச் செய்தார்களோ அதையே நாமும் செய்தால் நாமும் அவர்களைப் போலவே இருப்போம். இது மிகத் தெளிவானதல்லவா? புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் கிறிஸ்தவர்களாவதற்கு மக்கள் சில செயல்களைச் செய்ய வேண்டியிருந்தது. பின்பு கிறிஸ்தவர்களாய் அவர்கள் வாழ்ந்த போது, மற்றும் ஆராதித்தபோது சில குறிப்பிட்ட வழி முறைகளில் பிராந்திய சபைகளை உருவாக்கினர். அந்த சம்பவங்களில் அவர்கள் செய்ததை நாமும் செய்தால் அவர்கள் வழியிலேயே - புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாகவே நாமும் இருப்போம், நாமகரணமற்ற சபையின் உறுப்பினர்களாயிருப்போம்.

கிறிஸ்தவம் அநேக பிரிவுகளால் பாதிக்கப்பட்டிருப்பதே பிரச்சனையாகும், இன்றைய நாட்களில் நாமகரணக் கூட்டங்

களின் பெயர்கள் இல்லாமல் நாம் கிறிஸ்தவத்தைப் பற்றி நினைத்துப் பார்க்கவே முடியாது. நாமகரணமற்ற நிலையில் கிறிஸ்துவத்தைப் பற்றிய நிலையை உங்கள் மனக் கண்களில் வடிவமைத்துப் பாருங்கள்.

மூன்று வித நாமகரணக் கூட்டத்தார் ஒரு "ஒன்றிப்பு" கூட்டம் நடத்த முடிவு செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் ஒரு நீண்ட அறையை வாடகைக்கு எடுத்து, ஒரு பிரசங்கியாரை அழைக்கின்றனர். யாருக்கும் பொல்லாங்கு செய்ய வேண்டாம் என்ற எண்ணத்தில் அவர்கள் சுவிசேஷக் கூட்டத்தில் முதலாவது அந்த பிரசங்கியார் வந்து அப். 2ல், பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு பிரசங்கித்த வைகளை பிரசங்கம் பண்ணவும், அதன் பிறகு மனம் மாறுவோர் தாங்கள் சேர விரும்பும் சபையைத் தேர்ந்தெடுத் துக் கொள்ளட்டும் என்றும் அவர்கள் முடிவு செய்கின்றனர் என்று வைத்துக் கொள்வோம்.

சுவிசேஷக் கூட்டம் நடக்கின்றது, பிரசங்கியார் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார். மக்கள் கிறிஸ்துவை விசு வாசித்து பாவத்தைக் குறித்து உணர்வடைகின்றனர். பிரசங்கி யாரும், பேதுருவைப் போலவே, "நீங்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்போது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38) என்று கூறுகிறார். பிறகு பெந்தெகொஸ்தே நாளன்று ஜனங்கள் செய்ததுபோலவே, வசனத்தை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பண்ணப்படுகிறார்கள். அக்கூட்டத்தின் விளைவாக இருநூறு பேர் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்.

அதன் பிறகு, மனந்திரும்பிய அந்த இருநூறு பேருக்கு அந்த மூன்று நாமகரணக் கூட்டங்களில் ஏதாவதொன்றில் சேர வாய்ப்பளிக்கப்படுகிறது. அவர்களில் ஐம்பது பேர் கூட்டம் "அ" விலும், ஐம்பது பேர் கூட்டம் "ஆ" விலும், ஐம்பது பேர் கூட்டம் "இ" யிலும் சேருகின்றனர். ஆனால் எஞ்சியுள்ள ஐம்பது பேர், "நாம் ஏன் நாமகரணக் கூட்டம் ஒன்றில் போய் சேர வேண்டும்? நாம் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் ஜனங்கள் செய்தது போலவே ஆரம்பித்தோம்! தொடர்ந்து அப்படியே இருப்போம்" என்று கூறுகிறார்கள். ஆகவே, இந்த கடைசி ஐம்பது பேர் புதிய ஏற்பாட்டின் சபை போன்று

தங்களைத் தாங்களே ஒழுங்கமைத்துக் கொள்கின்றனர்.

இங்கு இரு கேள்விகள் உள்ளன. முதலாவது, இந்தக் கடைசி ஐம்பது பேர் எந்த சபையின் அங்கத்தினர்களாயிருப்பார்கள்? அவர்கள் புதிய ஏற்பாட்டின் மாதிரியின்படியே தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையைத் தொடங்கியிருப்பார்களேயானால், மற்றும் அந்த மாதிரியையே பின்பற்றுவார்களேயானால், புதிய ஏற்பாட்டு சபை என்று சொல்லப்படுவதைத் தவிர, மற்றபடி அவர்கள் எப்படியிருப்பார்கள்? இரண்டாவதாக, மனந் திரும்பிய அந்த இருநூறு பேர்களும் உண்மையிலேயே சுவிசேஷத்திற்கு கீழ்படிந்திருந்தால், அவர்கள் அம்மூன்றில் ஒரு கூட்டத்தில் சேர முடிவு செய்யுமுன் எந்த நாமகரணக் கூட்டத்தில் சேர்ந்திருந்தனர்? அவர்கள் ஏதேனும் நாமகரணக் கூட்டத்தில் ஏற்கனவே இல்லாதிருந்திருந்தால், அதைவிட்டு வேறு எந்தவொரு நாமகரணக் கூட்டத்திலும் சேர வேண்டிய அவசியம் என்ன வந்தது? எந்தவொரு நாமகரண கூட்டத்திலும் அங்கத்தினராகாமல், அவர்கள் இரட்சிக்கப்பட்டு, கர்த்தருடைய சபையில் அங்கத்தினராய் இருக்கக் கூடாதா?

கிறிஸ்தவர்களாவதற்கும், கிறிஸ்தவர்களாயிருப்பதற்கும் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் மக்கள் என்ன செய்தார் களோ, அதையே இன்றைய நாட்களில் ஜனங்கள் செய்தால் அவர்கள் நாமகரணமற்ற புதிய ஏற்பாட்டு சபையின் கிறிஸ்தவர்களாயிருப்பார்கள் என்பதையே நாம் வலியுறுத்து கின்றோம்.

நமது நோக்கத்தை விளக்கி, தற்காக்கும் போது நாம் பின்வரும் கேள்விக்குப் பதில் அளிக்கத் தயாராகின்றோம்: ஒரு சபையைப் போலவே வேறொரு சபையும் நல்லதென்றால், நாமகரணமற்ற நிலை வேண்டும் என்று கவலைப்பட வேண்டியது ஏன்?

## நாமகரணமற்ற கிறிஸ்தவத்திற்கான ஒரு வேண்டுகோள்

நிறைவாக, நாமகரணமற்ற கிறிஸ்தவத்திற்கான ஒரு வேண்டுகோளைக் கவனியுங்கள். நாமகரணமற்ற நிலை வேண்டும் என்பதற்கு வலுவான காரணங்கள் எதுவும் உள்ளதா? இதற்கான பதிலைக் காண நாம் இப்பாடத்தின் தலைப்புக்கு மறுபடியும் திரும்புவோம்: ஒரு சபையைப்

போலவே இன்னொரு சபையும் நல்லதல்ல என்பதால் நாமகரணமற்ற நிலை தேவை என்று நான் உங்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

தயவு செய்து தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். ஒரு நாமகரணக் கூட்டம் மற்ற நாமகரணத்தைப் போல நல்லதல்ல என்று நான் கூறவில்லை. எந்த ஒரு நாமகரணக் கூட்டத்தில் இருப்பதும் கர்த்தருடைய சபையில் இருப்பதைப்போன்றே நல்லதா என்றே நான் கேட்கின்றேன். கர்த்தருடைய சபை ஒன்று மாத்திரமே நல்லதென்னும்போது, நாமகரணமற்ற நிலை வேண்டும் என்பதற்குக் காரணமில்லை என்ற கருத்து கட்டாயம் மறைய வேண்டியதாகிறது.

புதிய ஏற்பாட்டு சபையைப் போன்று நல்லதாக ஏதேனும் நாமகரணக் கூட்டம் உள்ளதா என்று வினவும்போது, பின்வரும் கேள்விகளைச் சிந்தித்துப் பாருங்கள்!

ஒரு சரீரத்தைப் போன்று இன்னொரு சரீரம் நல்லதா? உங்கள் சரீரமானது உங்களுக்கு வேறு எந்த சரீரத்தைப் பார்க்கிலும் முக்கியமானதாக இருக்கும். அது போலவே, சபையும் கிறிஸ்துவின் சரீரமாய் உள்ளது (எபே. 1:22, 23). கிறிஸ்துவுக்குத் தமது சொந்த சரீரமாகிய சபையைப் பார்க்கிலும் (அவர் தொடங்கி வைக்காத) வேறு எந்த ஒரு நாமகரணக் கூட்டமும் முக்கியமாய் இருக்குமா?

ஒரு மணவாட்டியைப் பார்க்கிலும் வேறொரு மணவாட்டி சிறந்தவளாயிருப்பாளா? மக்களே, நீங்கள் உங்கள் சொந்த மனைவியைக் காட்டிலும் அதிகமாய் வேறொரு பெண்ணுக்கு முக்கியத்துவம் தருகிறீர்களா? அப்படி செய்யாமலிருப்பதே நல்லதல்லவா! சபையும் கூட கிறிஸ்துவின் மணவாட்டியாக உருவகப்படுத்தப்படுகிறது (எபே. 5:23-25; ரோமர் 7:4). கிறிஸ்து தமது சொந்த மணவாட்டியாகிய சபையைக் காட்டிலும் வேறொரு கூட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தருகிறாரா?

ஒரு குடும்பத்தைக் காட்டிலும் வேறொரு குடும்பம் சிறந்ததா? நமது சொந்த குடும்பத்திற்கு நமது இருதயத்தில் எப்போதுமே விசேஷித்த இடம் இருப்பதுண்டு; வேறு எதற்காகவும் அதை விற்கத் துணியமாட்டோம். சபை தேவனுடைய குடும்பமாய் இருக்கிறது (1 தீமோ. 3:15). தேவன் தமது சொந்த குடும்பத்தைக் காட்டிலும் வேறு எதற்கும் அதிக மதிப்பளிக்கிறாரா?

நாமகரணக் கூட்டங்கள் எதிலாவது இரட்சிப்பு காணப் படுகிறதா? இரட்சிப்பு என்பது சபையில் மட்டுமே உண்டு. கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, அதற்காக மரித்து, அதை இரட்சித்தார் (எபே. 5:23-25). இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் (அப். 2:47). நாமகரணக் கூட்டத்தைப் பற்றியும் இவ்வாறு கூற முடியுமா?

## முடிவுரை

நாம் என்ன முடிவு செய்ய வேண்டும்? ஒரு நாமகரணக் கூட்டம் வேறொரு நாமகரணக் கூட்டத்தைப் பார்க்கிலும் நல்லதாய் இருக்கலாம், ஆனால் கர்த்தரின் சபையைக் காட்டிலும் எந்த நாமகரணக் கூட்டமும் நல்லதாயிருக்க முடியாது. எனவே நாமகரணமற்ற நிலை என்ற வேண்டு கோளை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்படி உங்களை வலியுறுத்து கிறோம். ஏனென்றால் கிறிஸ்துவின் சரீரம், கிறிஸ்துவின் மணவாட்டி மற்றும் தேவனுடைய குடும்பம் என்று அழைக்கப் படுகின்ற சபையில் நீங்கள் அங்கமாக இதுவே ஒரே ஒரு வழி என்பது நிச்சயம் - கிறிஸ்து இரட்சித்த ஜனங்களோடு நீங்கள் அங்கமாக இது ஒன்றே வழியாகும்.

சபைகளுக்கு மாறுவது பற்றி எப்போதாவது நீங்கள் சிந்தித்தது உண்டா? அநேகர் குறிப்பிட்ட நாமகரணக் கூட்டத்தின் மேல் மதிப்பு வைக்காமல், தங்கள் மத கோட்பாடு களை அடிக்கடி மாற்றிக் கொள்கின்றனர். எந்த அடிப்படை யில் நீங்கள் வேறொரு சபையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?

ஒரு நாமகரணக் கூட்டத்திலிருந்து வேறொரு நாமகரணக் கூட்டத்திற்கு மாறிச் செல்வதில் பெரிய உண்மை நெறி எதுவும் கிடையாது. நீங்கள் மாறத்தான் வேண்டுமென விரும்பினால் எது சரி என்ற அடிப்படையில் கேட்டு மாறுவதையே நீங்கள் ஆலோசித்துப் பார்க்க வேண்டும். கர்த்தர் நான் என்ன செய்யும்படி விரும்புகிறார்? அநேக பிரிவுக் கூட்டங்களின் மத்தியில் எது அவருடைய ஒரே சபையாக உள்ளது? உங்கள் விருப்பப்படியான ஒரு சபைக்கு நீங்கள் போவது சரியல்ல. கிறிஸ்து தெரிந்து கொண்ட சபையை நீங்களும் தேர்ந்து கொள்ளுங்கள்!

கிறிஸ்துவின் சபைக்காக, புதிய ஏற்பாட்டில் நீங்கள்

*படிக்கின்ற சபைக்காகவே நாங்கள் குரல் கொடுக்கின்றோம். எந்தவித முன் தீர்மானமுமற்றவராய் உள்ள ஒருவர் இதில் என்ன தவறைக் காண முடியும்? இவ்வேண்டுகோளுக்கு இணங்க நீங்கள் ஏன் சிந்திக்கக் கூடாது?*

### குறிப்புகள்

[1]*உலக புத்தக அகராதி, 1967 பதிப்பு,* S.V. *"நாமகரணம்."* [2]*கையடக்க ஆக்ஸ்போர்ட் அகராதி,* S.V. *"நாமகரணம்."* [3]*ஜேம்ஸ்* C. *பெர்னால்டு, பொருட் சொற்கள், எதிர்ச்சொற்கள் மற்றும் பெயர் முதற் சொற்கள் (நியுயார்க்,* N.Y.: *பங்க் மற்றும் வாக்நல்ஸ் கம்பெனி, 1947), 93.* [4]*சரியான வார்த்தையைப் பயன்படுத்துங்கள் (பிளசென்ட்வில்,* N.Y.: *ரீடர்ஸ் டைஜெஸ்ட் அசிசோஷியேஷன், 1969), 149.*